# ශ්‍රී ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,935/5 — 1970 දෙසැම්බර් 11 වැනි සිකුරාදා — 1970.12.11

14,935/5 ம் இலக்கம் –1970 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 11 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

### விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

(173 ம் அத்தியாயமாகிய) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், (நானாவித பொருள்கள்) விலைகள் பிரதிக் கட்டுப்பாட்டாளராகிய இல்லேக்குட்டி ஒலிவர் கெனத் காமினி பொன்னுந்து ஆகிய நான், பின்வருமாறு இத்தால் கட்டளையிடுகின்றேன் :—

(1) இக்கட்டளை 1970 ம் ஆண்டின், 1 ஆம் இலக்க (கற்பலகை) விலைகள் கட்டுப்பாட்டுக் கட்டளை என எடுத்துக்காட்டப்படலாம் ;

(2) இக்கட்டளை தீவு முழுவதற்கும் ஏற்புடையதாகும் ;

(3) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ஆம் நிரலினுள்ள ஒவ்வொரு பதிவிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள விலைகள், அட்டவணையின் 1 ஆம் நிரலில் நேரொத்த பதிவில் காட்டப்பட்டுள்ள விவரத்தினைக் கொண்ட கற்பலகைகள் எதனையும் அவற்றிற்குமேல் விற்கப்படலாகா. உடனே கற்பலகைக்கு சில்லறை வியாபாரியினது ஆகக்கூடிய சில்லறை விலையும் ஆதல் வேண்டும் ;

(4) இதற்குள்ள அட்டவணையின் 1 ஆம் நிரலில் விவரிக்கப்பட்டுள்ள கற்பலகைகள் எத்தொகையையும் விற்பனைக்காகத் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டின் கீழுள்ள எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அல்லது விற்பனையாளரும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில், ஒரு அங்குல உயரத்திற்குக் குறையாத எண்களில் இக்கட்டளையால் அத்தகைய கற்பலகைகளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளும் காட்டப்பட்டவொரு அறிவித்தலை வாங்குபவரால் தெளிவாகக் காணக்கூடியவாறு துலக்கமாகக் பார்வைக்கு வைத்தல் வேண்டும்.

(5) இதற்குள்ள அட்டவணையின் 1 ஆம் நிரலில் விவரிக்கப்பட்டுள்ள கற்பலகைகளில் எதனையும் விற்கும் ஆள் ஒவ்வொருவரும்,

(அ) விற்பனைத் தேதி,

(ஆ) விற்கப்பட்ட கற்பலகைகளின் விபரமும் தொகையும்,

(இ) விற்கப்பட்ட கற்பலகைகளின் தொகைக்கு அறவிடப்படும் விலை, என்பன அதில் காட்டப்பட்டுள்ள பற்றுச்சீட்டு ஒன்றினை விலைக்கு வாங்குபவருக்குக் கொடுத்தல் வேண்டும்.

(6) இதற்குள்ள அட்டவணையின் 1 ஆம் நிரலில் குறிக்கப்பட்டுள்ள கற்பலகைகளில் எதிலும் அதன் வியாபாரியாக அல்லது விற்பனையாளராகத் தொழில் நடாத்தும் ஆள் ஒவ்வொருவரும் எந்த மாவட்டத்தில் தொழில் நடாத்தப்படுகின்றதோ அம்மாவட்டத்தின் விலைகள் பிரதிக்கட்டுப்பாட்டாளருக்கு,

(அ) அவ்விபரத்திரட்டு தயாரிக்கப்படும் அந்நேரத்தில் தம் வசமுள்ள அல்லது தமது கட்டுப்பாட்டின் கீழுள்ள அத்தகைய கற்பலகைகளின் கையிருப்பினையும்,

(ஆ) அத்தகைய கையிருப்புகள் வைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு பண்டசாலையையும் அல்லது வேறிடத்தையும்.

குறித்துரைக்கும் விபரத்திரட்டு ஒன்றினை 1970 ஆம் ஆண்டு திசெம்பர் திங்கள் 30 ஆந் தேதி நண்பகல் 12 மணிக்குப் பிந்தாமல் சமர்ப்பிக்க வேண்டும்.

(7) இதற்குள்ள அட்டவணையில் 2 ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலை, விற்கப்படும் கற்பலகைகளைச் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையையும் உள்ளடக்கும்.

இ. ஒ. கெ. கா. பொன்னுந்து,
விலைகள் பிரதிக்கட்டுப்பாட்டாளர் (நானாவித பொருள்கள்).

கொழும்பு, 1970 ஆம் திசெம்பர் மீ 11 ந் உ.

#### கற்பலகைகள்

#### அட்டவணை

| விவரணம் | | கற்பலகைக்கு சில்லறை வியாபாரியினது ஆகக்கூடிய சில்லறை விலை |
|---|---|---|
| பின்வரும் அளவு கற்பலகைகள் :— | | ரூ. ச. |
| 1. 8 அங்குலத்திற்கு குறையாத நீளமும் 6 அங்குலத்திற்கு குறையாத அகலமும் .. | .. | 0 95 |
| 2. 7 அங்குலத்திற்கு குறையாத நீளமும் 5 அங்குலத்திற்கு குறையாத அகலமும் .. | .. | 0 90 |
| 3. 7 அங்குலத்திற்கு குறைந்த நீளமும் 5 அங்குலத்திற்கு குறைந்த அகலமும் .. | .. | 0 60 |

குறிப்பு : 1. இந்த விலைகள் மேலேயுள்ளவை விற்கப்படவேண்டிய குறித்த விலைகளாக அமையா. இவைகள் அதற்குமேல் விற்பனைகள் செய்ய முடியாத ஆகக்கூடிய விலைகளாகும்.

2. கற்பலகைகள் மரத்தினால் அல்லது வேறு ஏதாவது பொருளினால் செய்யப்பட்ட மட்டையையும் உட்படுத்துவதாக கருதப்பட வேண்டும். எனினும், இதற்குள்ள அட்டவணையின் 1 ஆம் நிரலில் குறிக்கப்பட்ட அளவுகள் மட்டையை உட்படுத்தமாட்டா.

12–714/1

## விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

(173 ம் அத்தியாயமாகிய) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், (நானாவித பொருள்கள்) விலைகள் பிரதிக் கட்டுப்பாட்டாளராகிய இல்லேக்குட்டி ஒலிவர் கெனத் காமினி பெர்னாந்து ஆகிய நான், பின்வருமாறு இத்தால் கட்டளையிடுகின்றேன் :—

(1) இக்கட்டளை 1970 ம் ஆண்டின், 1 ஆம் இலக்க (கணிதக் கருவிகள்) விலைகள் கட்டுப்பாட்டுக் கட்டளை என எடுத்துக்காட்டப்படலாம் ;

(2) இக்கட்டளை தீவு முழுவதற்கும் ஏற்புடையதாகும் ;

(3) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ஆம் நிரலிலுள்ள ஒவ்வொரு பதிவிலும் குறித்துரைக்கப்பட்ட விலைகள், அட்டவணையின் 1 ஆம் நிரலில் நேரொத்த பதிவில் காட்டப்பட்டுள்ள விவரத்தினைக் கொண்ட ஏதாவது கணித கருவிப்பெட்டி அவற்றிற்கு மேல் விற்கப்படலாகா. உடனே கணிதக் கருவிப்பெட்டிக்கு சில்லறை விற்பனையாளரினது அல்லது வியாபாரியினது ஆகக்கூடிய சில்லறை விலையும் ஆதல் வேண்டும் ;

(4) இதற்குள்ள அட்டவணையின் 1 ஆம் நிரலில் விபரிக்கப்பட்டுள்ள கணிதக் கருவிப்பெட்டிகள் எத்தொகையையும் விற்பனைக்காகத் தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டின் கீழுள்ள எவ்விடத்திலாவது வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும்/விற்பனையாளரும், அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில், அந்த கணிதக் கருவிபெட்டிகளின வணிகக்குறியின் பெயரும் ஒரு அங்குல உயரத்திற்குக் குறையாத எண்களில் இக்கட்டளையால் அத்தகைய கணிதக் கருவிபெட்டிகளுக்கு விதிக்கப்பட்ட ஆகக் கூடிய விலைகளும் காட்டப்பட்டவொரு அறிவித்தலை வாங்குபவரால் தெளிவாகக் காணக்கூடியவாறு துலக்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டும்.

(5) மொத்தமாக அல்லது சில்லறையாக இதற்குள்ள அட்டவணையின் 1 ஆம் நிரலில் விபரிக்கப்பட்டுள்ள கணிதக் கருவிப் பெட்டிகள் எதனையும் விற்கும் ஆள் ஒவ்வொருவரும்,

(அ) விற்பனைத் தேதி,

(ஆ) விற்கப்பட்ட கணிதக்கருவிப் பெட்டிகளின் விபரமும் தொகையும்,

(இ) விற்கப்பட்ட கணிதக் கருவிப்பெட்டிகளின் தொகைக்கு அறவிடப்படும் விலை,

என்பன அதில் காட்டப்பட்டுள்ள பற்றுச்சீட்டு ஒன்றினை விலைக்கு வாங்குபவருக்குக் கொடுத்தல் வேண்டும்.

(6) இதற்குள்ள அட்டவணையின் 1 ம் நிரலில் குறிக்கப்பட்டுள்ள கணிதக்கருவிகளில் எதிலும் அதன் வியாபாரியாக அல்லது விற்பனையாளராகத் தொழில் நடாத்தும் ஆள் ஒவ்வொருவரும் எந்த மாவட்டத்தில தொழில் நடாத்தப்படுகின்றதோ அம்மாவட்டத்தின் விலைகள் பிரதிக்கட்டுப்பாட்டாளருக்கு,

(அ) அவ்விபரத்திரட்டு, தயாரிக்கப்படும் அந்நேரத்தில் தம் வசமுள்ள அல்லது தமது கட்டுப்பாட்டின் கீழுள்ள அத்தகைய கணிதக்கருவிப்பெட்டிகளின் கையிருப்பினையும்,

(ஆ) அத்தகைய கையிருப்புகள் வைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு பண்டசாலையையும் அல்லது வேறிடத்தையும்

குறித்துரைக்கும் விபரத்திட்டு ஒன்றினை 1970 ஆம் ஆண்டு திசெம்பர் திங்கள் 30 ஆந் தேதி நண்பகல் 12 மணிக்குப் பிந்தாமல் சமர்ப்பிக்க வேண்டும்.

(7) இதற்குள்ள அட்டவணையில் 2 ஆம் நிரல்கள் ஒவ்வொன்றிலும் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலை, விற்கப்படும் கணிதக் கருவிப் பெட்டிகளைச் சுற்றிக் கொடுக்கப்படும் உறை அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலன் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையையும் உள்ளடக்கும்.

(8) (1) இக்கட்டளையின் நோக்கங்களுக்காக " கணிதக் கருவிகளின் முழுப்பெட்டியொன்று " பின்வரும் கருவிகளைக் கொண்ட மூட்டுப் பிணையல் உடைய மூடியைக் கொண்ட பெட்டியெனக்கருதப்பட வேண்டும் :—

ஒரு சோடி கவராயம்,
ஒரு சோடி கவை முள்கருவி,
ஒரு பாகைமானி,
இரண்டு மூலை மட்டங்கள்,
ஏகபரிமாண அளவிடையினால் அடையாளமிடப்பட்ட ஆறு அங்குலத்திற்கு குறையாத ஒரு அடி மட்டம்,
கவராயச் சோடியுடன் உபயோகத்தற்கான பென்சில் ஒன்று.
ஒரு தேய்த்தழி கருவி,

(2) (1) ஆம் பந்தியில் விவரங் கூறப்பட்ட எல்லா கருவிகளையும் உள்ளடக்காத ஏதாவது கணிக்கருவிப்பெட்டி முழுமையற்ற கருவிப் பெட்டியாகக் கருதப்பட வேண்டும். அத்தகைய முழுமையற்ற கணிதக் கருவிப் பெட்டியின விலை, இக்கட்டளையில் கணிதக் கருவிகளின் முழுப்பெட்டிக்கு குறிப்பிட்ட ஆகக்கூடிய விலை பின்வரும் முறையில குறைக்கப்பட்டிருக்க வேண்டும்.

| சேர்க்கப்படாத கருவிகள் | விலை பின்வருவனவற்றால் குறைக்கப்படும் ரூ. ச. |
|---|---|
| கவராயச் சோடி | 1 50 |
| கவைமுள் கருவிச்சோடி | 1 00 |
| பாகைமானி | 0 50 |
| மூலை மட்டம் | 0 50 |
| அடி மட்டம் | 0 20 |
| பென்சில் | 0 10 |
| தேய்த்தழி கருவி | 0 10 |

(9) இக்கட்டளை வார்ப்புருவுக்கான படிவத்தில் வார்க்கப்பட்ட ஒரு சோடி கவை முள்கருவிகளும், ஒரு சோடி கவராயங்களும் உடைய பிளாஸ்டிக் பெட்டியில் இருக்கும் " மெற்றவிச் சுப்பர் " கணித கருவித்தொகுதிக்குப் பொருத்தமுடையதாகாது.

கொழும்பு, 11, டிசம்பர் 1970

இ. ஓ. கெ. கா. பெர்னாந்து,
விலைகள் பிரதிக்கட்டுப்பாட்டாளர்,
(நானாவித பொருள்கள்).

### அட்டவணை
### கணிதக்கருவிகள்

| விவரணம் | கணிதக் கருவிப் பெட்டிக்கு சில்லறை வியாபாரியினது ஆகக்கூடிய சில்லறை விலை ரூ. ச. |
|---|---|
| கணிதக் கருவிகளின் முழுப் பெட்டி | 6 00 |

குறிப்பு.—இந்த விலைகள் மேலேயுள்ளவை விற்கப்படவேண்டிய குறித்த விலைகளாக அமையா. இவைகள் அதற்குமேல் விற்பனைகள் செய்யமுடியாத ஆகக் கூடிய விலைகளாகும்.

12–714/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.